## தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விருது -2025

ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் பாராட்டு பத்திரங்களுடன் தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளான பிப்ரவரி 24 அன்று மாநில அரசு விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, 2024-2025 ஆம் ஆண்டு பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினமான பிப்ரவரி 24 அன்று விருதுகள் வழங்கப்படவுள்ளதால், இவ்விருதுக்கான விண்ணப்ப விவரங்களை இணைப்பில் காணும் படிவத்தில் உள்ளவாறு, தமிழக அரசின் விருதுகள் இணையதளத்தில் (http://awards.tn.gov.in) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் 01.08.2024 முதல் 15.01.2025 வரை பதிவேற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**<u>தகுதிகள்</u>**

1. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இவ்விருதுகள் பொருந்தும்.
2. அனைத்து மாவட்டங்களும் அவரவர் மாவட்டத்தில், பெண் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், மக்களிடையே பெண் குழந்தைகளுக்கு எதிரான மனப்பாங்கினைகளையும் பொருட்டு சுவரோவியங்கள், சுவரொட்டிகள், குறும்படங்கள், துண்டு பிரசுரங்கள், கையேடுகள் தயாரித்து வெளியிடுதல், பேரணிகள், மனிதச்சங்கிலி, போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகள் வாயிலாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும்.
3. பெண் குழந்தைகளுக்கான நலத்திட்டங்களில் அதிகளவு பயனாளிகளை பயன் பெற செய்திருக்க வேண்டும்.
4. மாவட்டத்தில் பெண்சிசுக்கொலை போன்ற குற்றங்கள் ஏதும் நிகழாமல் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான நிலையினை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.
5. குழந்தைகளுக்கு குறிப்பாக, பெண் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்கள் ஏதும் நிகழாமல் பாதுகாப்பான சூழலை ஏற்படுத்த மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**சாதனைகள்**

மாவட்டங்கள் விருதினை பெற பிறப்பு பாலின விகிதத்தினை உயர்த்தும் வகையில் கீழ்கண்ட இலக்குகளை அடைந்திருக்க வேண்டும். (கடந்த ஆண்டின் நிலையுடன் ஒப்பிடும் போது)

1. மாவட்டத்தின் பிறப்பு பாலின விகிதத்தினை வருடத்திற்கு குறைந்தது 5 புள்ளிகள் அதிகரிக்கச் செய்திருக்க வேண்டும்.
2. மாவட்டத்தில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் இறப்பினை வருடத்திற்கு 1.5 புள்ளிகள் வீதம் குறைத்திருக்க வேண்டும்.
3. மாவட்டத்தின் கருக்கலைப்பு விகிதத்தினை குறைத்திருக்க வேண்டும்.
4. 1994 ஆம் ஆண்டைய முன் கருத்தரிப்பு மற்றும் மகப்பேறுக்கு முந்தைய பரிசோதனை நுட்பங்கள் சட்டம் (PCPNDT Act) மாவட்டத்தில் வலுவாக செயல்படுத்தப்பட்டு பரிசோதனை மையங்கள் (Scan Centers) தொடர் கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.
5. மாவட்டத்தில் உயர் பிறப்பு விகிதத்தினை (Higher Order Birth) குறைத்திருக்க வேண்டும்.
6. குழந்தை திருமணங்கள் அதிக அளவில் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.
7. நடைப்பெற்ற குழந்தை திருமணங்கள் மீது அதிக அளவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
8. பெண் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்கு உதவிகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும்.

**2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்குழந்தைகள் பாதுகாப்பு தின மாநில விருதுக்கு விண்ணப்பிப்பதற்குரிய விதிமுறைகள்**

- இணையதளத்தில் விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 15.01.2025
- இணையதளத்தில் இணைக்கப்பட்டுள்ள படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்ய வேண்டும்.
- இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் கையேடாக )Booklet) தமிழ் செய்து தயார் (அ அச்சு ஆங்கிலத்தில் ( செய்யப்பட்டுஇவ்வாணையரகத்திற்கு அனுப்ப வேண்டும்.

<u>**படிவம்**</u>

## தமிழ்நாடு பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின விருது -2025

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியரின் பெயர் | | | |
| 2, | மாவட்டத்தின் பெயர் | | | |
| 3, | மாவட்டத்தில் பணி புரிந்த காலம் | | | |
| 4, | பிறப்பு பாலின விகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | **2023** | **2022** | **2021** |
| 5. | உயர் பிறப்பு விகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | **2023** | **2022** | **2021** |
| 6. | குழந்தைகள் இறப்பு விகிதம் (0-5 வயது வரை) (கடந்த 3 ஆண்டுகள்) | **2023** | **2022** | **2021** |
| 7. | கருக்கலைப்பு விகிதம் (கடந்த 3 ஆண்டுகள்) | **2023** | **2022** | **2021** |
| 8. | மாவட்டத்தில் செயல்படும் பதிவு செய்யப்பட்ட ஸ்கேன் மையங்களின் எண்ணிக்கை. | | | |
| 9. | கடந்த ஆண்டு ஆய்வு செய்யப்பட்ட ஸ்கேன் மையங்களின் எண்ணிக்கை. | | | |
| 10. | விதிமுறைகளை பின்பற்றாத ஸ்கேன் மையங்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் | **பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை** | **முடிக்கப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை** | **வழங்கப்பட்ட தண்டனை விவரம்** |
| 11. | குழந்தை திருமண விவரங்கள் | **தடுக்கப்பட்டது** | **நடந்து முடிந்தது** | **முதல் தகவல் அறிக்கை** |

| | | | | |
|---|---|---|---|---|
| . | | | | **பதிவுசெய்தது** |
| 12. | மாவட்டத்தில் பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் | | | |
| 13. | குழந்தைகளின் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் | | | |
| 14. | பெண் குழந்தைகளுக்கான நிதியுதவி திட்டவிவரம்/ பெண் குழந்தைகளின் பிறப்பு (ம) வாழ்வாதாரத்தை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் | | | |
| 15. | பெண் சிசுக்கொலை சம்பவங்கள் (ம) அதற்கான தண்டனைகள் | | | |
| 16. | விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் (ம) ஆராய்ச்சி போன்ற நடவடிக்கை விவரங்கள் பதிவேற்றம் செய்தல் | | | |
| 17. | சான்றிதழ்களும் (ம) தொடர்புடைய ஆவணங்கள் விவரங்கள் பதிவேற்றம் செய்தல் | | | |

**Tamil Nadu Girl Child Protection Day Award – 2025**

| | | |
|---|---|---|
| 1. | Name of the District Collector | |
| 2, | Name of the District | |
| 3, | Working Period in the district | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4, | Sex Ratio at birth in last 3 years | **2023** | **2022** | **2021** |
| 5. | Higher Order Birth in last 3 years | **2023** | **2022** | **2021** |
| 6. | Infant Mortality rate of 0-5 years children in last 3 years | **2023** | **2022** | **2021** |
| 7. | Details of Abortion ratio in last 3 years | **2023** | **2022** | **2021** |
| 8. | No. of Registered Scan centre's functioning in district | | | |
| 9. | No. of Scan centers inspected during last 3 years | | | |
| 10 | Details of the action taken on the scan centres which do not follow the rules | **No.of cases filed** | **No.of cases closed** | **Details of pucishment** |
| 11. | Details of Child Marriage | **Stopped** | **Conducted** | **FIR filed** |
| 12 | Details of modalities and initiatives taken by you to increase girl child sex ratio in the district | | | |
| 13. | Details of any other activities implemented for the welfare of the children | | | |
| 14 | Details of assistance given through various departments/ Details of activities undertaken to ensure birth of girl children and their survival through other resources | | | |
| 15 | Details of incidences of female infanticide and punishment details | | | |
| 16 | Upload detailed information about your Act/ research/Service | | | |
| 17 | Upload Complete details/ Certificates/ any other relevant documents | | | |